


புதுகை
வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ பிப்ரவரி. 07, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 124 ❖ ரூ.10

### மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது பூமிக்கு அடியில்

# ஆழத்தில் பூகம்பம்

## என்னவென்று உணர்வதற்குள் கட்டிடங்கள் தரைமட்டமாகின
## துருக்கி - சிரியா இரு நாடுகளிலும் இதுவரை 1,500 பேர் வரை பலியாகினர்





**அங்காரா, பிப். 7-**

**பிப்ரவரி 6 அதிகாலை 4 மணி எல்லா நாளையும் போல் புலரவில்லை துருக்கியிலும் சிரியாவிலும், இன்னும் சில அண்டை நாடுகளிலும். துருக்கியின் தொழில்நகரான காசியான்டேப் நகரில் ஏற்பட்ட பூகம்பம் துருக்கியையும், சிரியாவையும்நிலைகுலைய வைத்துள்ளது. இதுவரை 1,500-க்கு மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

துருக்கியின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள எல்பிஸ்தான் மாவட்டத்தில் மீண்டும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது, அம்மமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. துருக்கியின் தொழில் நகரான காசியான்டேப் சிரிய எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இங்கு நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது.இதன் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவாகியது. பூகம்பத்தின் மையம் காசியான்டேப் நகரிலிருந்து 33 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் இருந்து சரியாக 15 நிமிடங்கள் இடைவெளியில் இன்னொருசக்திவாய்ந்த நிலஅதிர்வும்ஏற்பட்டது. அதன் தாக்கம் அளவுகோலில் 6.7 ரிக்டராக பதிவாகியது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த பூகம்பத்தின் அதிர்வலைகள் லெபனான், சிரியா, ஜோர்டான், இராக் ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டது.

இந்த பூகம்பத்திற்கு துருக்கி - சிரியா இரு நாடுகளிலும் இதுவரை 1,500 பேர் வரை பலியாகினர். ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். பூகம்பத்திற்குதுருக்கியின் காசியான்டேப், சிரியாவின் அஃப்ரின் நகரமும் மோசமான பாதிப்பை சந்தித்துள்ளன.

இந்த நிலையில், துருக்கியின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள எல்பிஸ்தான் மாவட்டத்தில் மீண்டும் புதிய நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.6 ஆக பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இரு நாடுகளிலும் தொடர்ந்து மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. உலகின் அதிகமான பூகம்ப மண்டலங்களில் துருக்கியும் ஒன்று. 1999-ஆம் ஆண்டு துருக்கியின் டுஸ்ஸே நகரில் 7.4 ரிக்டர் அளவில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. அதில் சுமார் 17 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். துருக்கி வரலாற்றில் தற்போதுவரை அதுதான் மோசமான பூகம்பமாக அறியப்படுகிறது. அதன் பின்னர் 2020, 2022 ஆம் ஆண்டுகளிலும் சக்திவாய்ந்தபூகம்பங்கள் ஏற்பட்டன. என்பது குறிப்பிடதக்கது.

**திமுக ஆட்சியிலும் கொள்ளை**

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனராக பொறுப்பேற்றுக் கொண்ட த.மோகன் மரியாதையை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## டெல்டா மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிவாரணம் அறிவித்த முதல்வருக்கு விவசாயிகள் பாராட்டு

**தஞ்சாவூர் , பிப். 7-**

**டெல்டாமாவட்டங்களில் பருவம் தவறி பெய்த கனமழையால் பாதிப்புக்குள்ளான நெல், உளுந்து பயிருக்கு உடனடியாக நிவாரணம் அறிவித்த தமிழக முதல்வருக்கு டெல்டா மாவட்ட விவசாயிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.**



டெல்டா மாவட்டங்களில் பருவம் தவறி பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த சம்பா நெல் சேதமடைந்தது. மேலும், உளுந்து, நிலக்கடலை பயிர்களும் மழையினால் பாதிக்கப்பட்டது. இதையடுத்து, டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த அமைச்சர்கள் குழு நேற்று முதல்வரை சந்தித்து அறிக்கையை சமர்பித்தனர். பின்னர் அமைச்சர், அதிகாரிகளிடம் ஆலோசித்த பின்னர் முதல்வர், மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு ஹெக்டேருக்கு ரூ.20,000 நிவாரணமும், விரைந்து அறுவடை செய்ய வேளாண் பொறியியல் துறை மூலம் 50 சதவீத மானியத்தில் அறுவடை இயந்திரங்களை வழங்கவும், உளுந்து உள்ளிட்ட மானாவாரிப் பயிருக்கு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரமும், 50 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு 8 கிலோ விதை உளுந்தும், பயிர் காப்பீடு திட்டத்தில் சோதனை அறுவடை முடிந்தாலும், மீண்டும் சோதனை அறுவடை செய்ய வேண்டும் என கூறி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் வரவேற்றுள்ளனர். இதுகுறித்து நசுவினி ஆற்று படுக்கை மேம்பாட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் வீரசேனன், "மழை பாதிக்க உடன் அமைச்சர்களை அனுப்பி ஆய்வு செய்த 24 மணி நேரத்தில் நிவாரணம் அறிவத்த முதல்வரை பாராட்டுகிறோம். அதே நேரத்தில் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் நிவாரணத்தை உயர்த்தி வழங்கியிருக்கவேண்டும், அதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் என்.வி.கண்ணன் கூறும்போது, "பருவம் தவறி பெய்த மழையால் பாதிப்பு அதிகமாக உள்ளது. கணக்கெடுப்பை விடுபடாமல் மேற்கொள்ள வேண்டும். சம்பாவுக்கு பயிர் காப்பீடு செய்துள்ள நிலையில், அதற்குண்டான இழப்பீடு முதல்வர் பெற்றுத் தர வேண்டும்" என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க டெல்டா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.ஜெகதீசன் கூறும்போது, "உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால், அதற்கு ஏற்றார் போல் நிவாரணத்தை உயர்த்தி தர வேண்டும். ஹெக்டேருக்கு உற்பத்தி செலவு என்பது ரூ.75 ஆயிரம் ஆகிறது. ஆனால், ரூ.20 ஆயிரம் என்பது போதாது. ஆனால், பாதிப்பை உணர்ந்து உடனடியாக நிவாரணம் அறிவித்த முதல்வரை பாராட்டுகிறோம்" என்றார்.

## புதுக்கோட்டையில் ஸ்ரீ பிரகதாம்பாள் ஆராதனை விழா பார்வையாளர்களை கவர்ந்த சிறுவர்,சிறுமியர்களின் இசை நிகழ்ச்சி

புதுக்கோட்டை,பிப்.7-

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவிலில் இசை விழா நடைபெற்றது புதுக்கோட்டை திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் கோகர்னேஸ்வரர் ஆலயத்தில்ஸ்ரீ பிரகதாம்பாள் ஆராதனை விழா திருச்சி முன்னாள் மேயர் சாரு பாலா தொண்டைமான் தலைமையில் நடைபெற்றது.





பூஜாலயகண்ணன் குழுவினரின் வாய்ப்பாட்டு, பானுமதி சுப்பிரமணியனின் வாய்ப்பாட்டு, அருணா ராஜகோபாலின்கீபோர்டு, ஸ்ரீ ஹரிமோகனின் பக்தி பாடல்கள், அகரம் அபிதேவகி சத்தியபாலன் இசை குடும்பத்தை சேர்ந்த நாராயணசாமி என்ற ரவீந்திரன் வீணையும், ஆகியோரின் குரல் இசையில் ஆராதனை விழாநடந்தது, நிகழ்வில் அசத்திய சிறுவர்கள் சிறுமிகள் ,சிறுவன் கிருத்திக் ஹரிஷின் ஹித்தார் வாசிப்பும் , 3 வயது சாய்சிவாவின் மிருதங்க இசையும் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்திருந்தது.

பிரகதாம்பாள் ஆராதனை விழா நடைபெற்றது, புதுக்கோட்டை இசைக் கலைஞர்கள் தங்கள் இசை நிகழ்ச்சியை நடத்தினர், இசை கச்சேரியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு இசை பள்ளி ஆசிரியர்களும் விழா குழுவினரும் சிறப்பு செய்தனர், விழாவில் தயானந்த சந்திரசேகர் , டாக்டர் ராமதாஸ், வீணை இசைகலைஞர் சந்திரசேகர் ,அறங்காவலர் குழுத் தலைவர் செந்தில்குமார், சத்தியராம்ராமுகண்ணு, மருத்துவர் ராமமூர்த்தி ,கம்பன்கழகம்சம்பத் குமார், பழனியப்பா நகர் முரளி சமூகஆர்வலர்கள் இசைவல்லுனர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை டாக்டர் ராமதாஸ் தலைமையில் பழனியப்பா நகர் முரளி பேராசிரியர் காயத்திரிதேவி உள்ளிட்ட பலரும் செய்திருந்தனர்.

## அறந்தாங்கியில் பேருந்து நிலையம் பின்புறம் இடையூராக இருந்த கடைகளை நகராட்சி ஊழியர்கள் அப்புறப்படுத்தினர்

*அறந்தாங்கி,பிப்.7-*

*அறந்தாங்கி பேருந்து நிலையம் பின்புறம் பொதுமக்களுக்கு இடையூராக சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கடைகளை அறந்தாங்கி நகராட்சி ஊழியர்கள் அப்புறப்படுத்தினர்.*



*புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகராட்சி அறந்தாங்கி, அறந்தாங்கி பேருந்து நிலையம் பின்புறம் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆக்கிரமிப்பு செய்திருந்த கடைகள் குறித்து நெடுஞ்சாலை துறையினர் கடந்தாண்டு புகாரின் பேரில் ஆக்கிரமிப்புகளை அகற்றினர்.*

*ஆனால்ஆக்கிரமிப்புகள் அகற்றிய சில நாட்களுக்கு பின்பு மீண்டும் கடை வைத்திருப்போரின் ஆக்கிரமிப்பு தொடர்ந்தது தற்பொழுது ஆக்கிரமிப்புகள் அதிகரித்ததால் அறந்தாங்கி நகராட்சி நிர்வாகத்தினர் உடனடியாக அறந்தாங்கி பேருந்து நிலையம் பின்புறம் சாலையோரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கடைகள் மற்றும் நிறுவனங்களை கண்டறிந்து உடனடியாக அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.*

## தொண்டைமானேந்தல் ஊரணிக்கரையில் புத்த சமயச்சின்னம் தர்மசக்கரத்தூண் கண்டுபிடிப்பு

**ஆவுடையார்கோவில், பிப். 7-**

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே தொண்டைமானேந்தல் , புதுவாக்காடு ஊரணிக்கரையில் புத்த சமயச்சின்னமான தர்மசக்கரத்தூண் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.





புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே புதுவாக்காடு ஊரணிக்கரையருகே நிலத்தை சீர் செய்யும் போது தர்மசக்கர புடைப்புச் சிற்பத்துடன் தூண் கல் வெளிப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து சமூக ஆர்வலர் எக்ஸ்.எடிசன் மற்றும் புதுவாக்காடு கிராம இளைஞர்கள் புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வு கழகத்திற்கு தகவலளித்தனர். தூண் புடைப்பு சிற்பம் புத்த சமயத்தில் மிக முக்கிய சின்னமாக கருதப்படும் தர்மசக்கரம் என்பதை புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வு கழகத்தினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழக நிறுவனர் மங்கனூர் ஆ.மணிகண்டன் கூறியதாவது: தர்மசக்கரம் அல்லது அறவாழி என்பது புத்தம் சமணம் மற்றும் வைணவ மதங்களில் முக்கிய சின்னமாக உள்ளது. தற்போது அடையாளப் படுத்தப்பட்டுள்ள தர்மசக்கரம் எட்டு ஆரங்களுடன் ஒரு தாங்கியில் வைக்கப்பட்டிருப்பது போல பொறிக்கப் பட்டிருக்கிறது. மேலும் தாங்கிப்பலகையில் சக்கரத்திற்கு அடிப்புறத்தில், தெளிவற்ற மான் உருவம் இருமருங்கிலும், மையத்தில் விளக்கு அமைப்பும் காட்டப்பட்டிருக்கிறது. இது புத்த தர்மசக்கரத்தோடு தொடர்புடையது என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. மேலும் சக்கரத்தின் மேல்புறமாக ஒரு ஒளிக்கீற்று காட்டப்பட்டிருக்கிறது, இது புத்தருக்கு காட்டப்படும் ஒரு முக்கியமான அடையாளமாகும்.

வைணவ சக்கரங்களில் இந்த தீச்சுவாலை அமைப்பு மூன்று புறங்களில் காட்டப்படும், புடைப்பு சிற்பத்தில் மேல்புறம் மட்டும் காட்டப்பட்டிருப்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. தர்ம சக்கரத்தின் எட்டு ஆரங்கள் சொல்லும் தத்துவம் என்னவெனில், சரியான உயிரோட்டமான வாழ்க்கை, சரியான பார்வை, சரியான முயற்சி, சரியான கவனம், சரியான நோக்கம், சரியான நினைவாற்றல், சரியான செயல், சரியான பேச்சு என்பதாகும் . புத்தர் முதன்முதலில் சாரநாத்தில் மான் பூங்காவில், ஐந்து துறவிகளுக்கு உபதேசம் செய்து நிகழ்ச்சி, முதல் தர்மசக்கர சுழற்சியாக கொள்ளப்படுகிறது. இதை குறிக்கும் வகையிலே, தர்மசக்கரத்தின் இரு புறமும் மான்கள் காணப்படுவதுண்டு.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட தர்ம சக்கரத்தூண் நீர் நிலைக்கு அருகாமையில் கிடைத்துள்ளதால், மக்களுக்காக இந்நீர் நிலையை ஏற்படுத்தியவர்களால் நட்டுவிக்கப் பட்டிருக்கலாம் என்பதை அனுமானிக்க முடிகிறது. மேலும் இது போன்ற அடையாளத் தூண்கள் நிலங்களின் எல்லைகளை குறிப்பதற்கும் தாம் செய்வித்த பொதுப்பணியை, எந்நோக்கத்திற்காக செய்தோம் என்பதை வெளிப்படுத்து வதற்காகவும், நட்டுவிக்கும் பழக்கம் நடமுறையில் இருந்துள்ளது. இதுபௌத்த துறவிகள் அல்லது அந்த மதத்தை பின்பற்றியவர்கள் இப்பகுதியில் இருந்திருப்பதை உறுதி செய்வதாக இருக்கிறது. கடற்கரை அருகாமை கிராமமாக இது இருப்பதோடு, ஆவுடையார் கோவில் பகுதியிலுள்ள கரூர் கிராமத்திலும், மணமேல்குடி அருகே வன்னிச்சிப்பட்டிணம் எனும் ஊரில் புதுக்கோட்டை வரலாற்று அறிஞர் ஜெ. ராஜாமுகமது அவர்களால் இருப்பதைந்து ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்டு, காணாமல் போன புத்தர் சிற்பம் கண்டறிந்த இடமும் , கடலோர இலங்கைத்தீவும் அருகாமை பகுதிகளாக இருப்பதால், பௌத்தம் இப்பகுதியில் பரவியிருந்ததை வெளிப்படுத்தும் சான்றாக இத்தூண் கண்டுபிடிப்பை கருதமுடிகிறது. என்றார்

# இன்று

# 7-2-2023

உடல் எடை குறைத்து கொழுப்பை குறைத்து ரத்தம் சுத்தப்படுத்தும் அருகம்புல் பொடி

சக வருடம் 1944 மாகம் 18

| சுபகிருது தை 24 | FEB - TUE செவ்வாய் | ரஜப் 15 | தேய்பிறை 038 / 327 | இராசிபலன் |
|---|---|---|---|---|

தேய். துவிதியை 54.39 (கா. 04.27) மகம் 28.31 (மா. 05.59) தியாஜ் 50.07 அகல் 29.04 சித்த. சுவாமிமலை ஸ்ரீமுருகப் பெருமான் ஆயிர நாமாவளி கொண்ட தங்கப்பூமாலை சூடியருளல். நத்தம் ஸ்ரீமாரியம்மன் உற்சவம் ஆரம்பம். குரங்கனி ஸ்ரீமுத்துமாலையம்மன் புறப்பாடு. பெரிய நகக.


| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மகர லக்னம் இருப்பு நா. 1 வி. 05; சந்திராஷ்டமம் திருவோணம் அவிட்டம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.35

இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை

இராசிபலன்: மேஷம் - ஆதாயம்; ரிஷபம் - வெற்றி; மிதுனம் - நன்மை; கடகம் - நிறைவு; சிம்மம் - உயர்வு; கன்னி - அமைதி; துலாம் - புகழ்; விருச்சி - சுகம்; தனுசு - லாபம்; மகரம் - வெற்றி; கும்பம் - வரவு; மீனம் - தடங்கல்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்









# துருக்கி மற்றும் சிரியா எல்லையில் பயங்கர நிலநடுக்கம் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு பிரதமர் இரங்கல்



இஸ்தான்புல், பிப்.7–

துருக்கி-சிரியா எல்லையில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

துருக்கி- சிரியா எல்லையில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. துருக்கியின் காசியண்டெப் நகர் அருகே 17 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.8 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் துருக்கி- சிரியாவின் எல்லை நகரங்களில் கட்டிடங்கள் குலுங்கின.

இந்த நிலநடுக்கம் இஸ்ரேல், லெபனான் போன்ற அண்டை நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. கடுமையான நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் இடிந்து விழுந்தன, அதிகாலை என்பதால் வீடுகளில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தபோது நிலநடுக்கம் ஏற்பட்டு கட்டிடங்கள் இடிந்து அதன் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கிக்கொண்டனர். இந்த நிலநடுக்கத்தில் சிக்கியவர்களை மீட்க துருக்கி - சிரியாவின் மீட்புக் குழுவினர் களமிறக்கப்பட்டு மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த நிலநடுக்கத்தால் இதுவரை 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும், 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ளனர் அவர்களை மீட்கவும் மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. நிலநடுக்கத்தில் பாதிப்பு அதிக அளவில் உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில், சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால், உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். துருக்கி நிலநடுக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டு உடைமைகள் சேதமடைந்துள்ளது வேதனை தருகிறது என பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

# லக்னோவில் நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் துப்பாக்கியால் சுட்டு கொண்டாட்டம்

## குண்டு பாய்ந்து இளைஞர் பலி




லக்னோ, பிப்.7–

நிச்சயதார்த்த நிகழ்ச்சியின் போது துப்பாக்கியால் சுட்டு கொண்டாடியதில் குண்டு பாய்ந்து இளைஞர் பலியாகியுள்ளார்.

வட இந்தியாவில் துப்பாக்கி கலாசாரம் பெருமளவில் உள்ளது. குறிப்பாக ஏதேனும் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் போது துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு கொண்டாட்டத்தில் ஈடுபடுவது வழக்கமாகும். இந்நிலையில், உத்தரபிரதேசத்தின் புலந்த்சாகர் மாவட்டம் பிபிநகரில் நேற்று திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிச்சயதார்த்த நிகழ்ச்சியின் போது விஷால் என்ற நபர் தான் வைத்திருந்த உரிமம்பெற்ற துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு ஆட்டம், பாட்டம் என கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டபோது தவறுதலாக நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த சரத் (வயது 24), ராஜ்குமார் ஆகிய 2 பேர் மீது குண்டு பாய்ந்தது. இதில், படுகாயமடைந்த 2 பேரும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சரத் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார், மற்றொரு நபருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர,. இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் துப்பாக்கியால் சுட்டுகொண்டாட்டத்தில் ஈடுபட்டு இளைஞர் உயிரிழக்க காரணமான விஷாலை கைது செய்தனர்.








ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேட்சை வேட்பாளராக ஆலிம் முஹம்மது ஹபீழ் தாவூதி வேட்பு மனு தாக்கல் செய்தார்

# உடையார்பாளையம் பேரூராட்சியில் ரூ.325.50 லட்சம் மதிப்பில் வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா



அரியலூர்,பிப்.7–

உடையார்பாளையம் பேரூராட்சியில்,வார சந்தை மேம்பாடு உள்பட, 325.50 லட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் அடிக்கல் நாட்டினார்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, உடையார்பாளையம் பேரூராட்சியில், கலைஞர் நகர்ப்புறமேம்பாடுதிட்டத்தின் கீழ், உடையார்பாளையம் பேரூராட்சிவார சந்தையில், ரூபாய் 270.00 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணி,

மற்றும் 3, 5, 6, 15-வது வார்டுகளில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ், ரூபாய் 55.50 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி ஆகியவற்றுக்கு, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் அடிக்கல்நாட்டிபணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் பேரூராட்சித் தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், துணைத் தலைவர் அக்பர் அலி, செயல் அலுவலர் கோமதி, இளநிலை பொறியாளர் சி.பூசாமி , திமுக ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய செயலாளர் தன சேகர், உடையார்பாளையம் பேரூர் செயலாளர் கோபாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான், மாவட்ட பிரதிநிதிகள் தங்கராசு, துருவேந்திரன் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரி ஹாக்கி அணி மாநில அளவிலான போட்டிக்கு தகுதி




புதுக்கோட்டை,பிப்.7–

புதுக்கோட்டையை அடுத்த லெணாவிலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியின் ஹாக்கி அணி தஞ்சை மண்டல அளவிலான போட்டியில் முதலிடம் பெற்றதையடுத்து நேற்று கல்லூரியில் பாராட்டு விழா நடைப்பெற்றது.

கல்லூரி முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்து பேசினார், கல்லூரி தலைவர் செல்வராஜ் ,மற்றும் நிர்வாக இயக்குநர் வயிரவன், செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை மண்டல அளவிலான ஹாக்கி போட்டி கும்பகோணம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நடைப்பெற்றது. செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் கலந்துக் கொண்டு இறுதி போட்டியில் கும்பகோணம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியை வென்று மண்டல அளவில் முதலிடம் பிடித்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பைகள், மற்றும் சான்றிதல்கள் வழங்கப்பட்டது.

கல்லூரி முதன்மை செயல் அலுவலர் கார்த்திக் மாணவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.இதில் உபத் தலைவர் நடராஜன் , தாளாளர் ராமையா, முதன்மை செயல் இயக்குனர் பாண்டிகிருஷ்ணன் , மனிதவள இயக்குனர் மீனா வயிரவன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி மைய அலுவலர்களுக்கு பயிற்சி முகாம்



ஈரோடு, பிப். 7 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 27-ந் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் பொதுமக்கள் வாக்களிக்கும் வகையில் 238 வாக்குச்சாவடி மையங்கள் 52 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குச்சாவடி மையங்களில் 1,206 அலுவலர்கள் பணியாற்ற உள்ளார்கள். இவர்களுக்கு 3 கட்ட பயிற்சி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஓட்டுப்பதிவு அன்று செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக ஓட்டுப்பதிவு அலுவலர்களுக்கு முதல்கட்ட பயிற்சி ரங்கம்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது.

இந்த பயிற்சியில் முதன்மை வாக்குச்சாவடி அலுவலர் ஒருவர் மற்றும் 3 வாக்குச்சாவடி அலுவலர்கள் என 1,206 பேர் பங்கேற்றனர். அவர்களுக்கு மின்னணு ஓட்டுப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி, வி.வி. பேட் எப்படி கையாள்வது, பழுது ஏற்பட்டால் அவற்றை எப்படி சரி செய்வது மற்றும் வாக்காளர் பட்டியல் போன்றவற்றை எவ்வாறு கையாளுவது என்பது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இதேபோன்று அடுத்த வாரம் 2-வது கட்ட பயிற்சியும், வரும் 26-ந் தேதி 3-ம் கட்ட பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

இறுதி பயிற்சி நாளன்று ஒவ்வொரு பணியாளர்களுக்கும் எந்தந்த வாக்குச்சாவடிகளில் பணியாற்ற வேண்டும் என்கிற ஆணை வழங்கப்படும்.

# கடையநல்லூர் அருகே புளியங்குடியில் தைப்பூசத் திருவிழாவையொட்டி திருவிளக்கு பூஜை



தென்காசி,பிப்.7–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள புளியங்குடி நகர பாஜக சார்பில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டி 300-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜை டி. என். புதுக்குடி ஸ்ரீ காளியம்மன் கோவிலில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு மாநில துணைத்தலைவர் ஆனந்தன் கலந்து கொண்டு விளக்கு பூஜைக்கான பொருட்கள் மற்றும் அன்னதானத்தை வழங்கி சிறப்பித்தார். இதில் நகரத் தலைவர் சண்முகசுந்தரம் பொதுச்செயலாளர் மாரீஸ் , மாரியப்பன், அருணாச்சலம்,மகளிர் அணிதலைவிமகாலட்சுமி, இராதாகிருஷ்ணன், ஆன்மீகப் பிரிவு மாவட்ட தலைவர், சங்கரநாராயணன், மாவட்ட இளைஞரணி பொதுச்செயலாளர் சேகர், புளியங்குடி நகர இளைஞர் அணித் தலைவர் மற்றும் கிளை நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தென்காசியில் மோடி அரசுக்கு எதிராக காங்கிரஸ் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி,பிப்.7–

தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலையம் முன்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. எஸ். அழகிரியின் அறிவுறுத்தலின்படி தென்காசி மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் எல்ஐசி, எஸ்பிஐ, நிறுவனங்களில் கடன் வாங்கி மோசடி செய்யும் அதானிக்கு துணை போகும் மோடி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர், இந்நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும் தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பழனி நாடார் தலைமை வகித்தார், நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், மாவட்ட பொருளாளர் முரளி ராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், மாநில நிர்வாக குழு உறுப்பினர் மருத்துவர். சங்கர குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சட்டநாதன், ஜேம்ஸ், மாவட்ட துணைத் தலைவர்கள் திருஞானம், சிவராமகிருஷ்ணன், சண்முகவேல், முகம்மது உசேன்,மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏ.ஜி.எம். கணேசன், காஜாமைதீன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், வட்டாரத் தலைவர் பெருமாள், சந்தோஷ், சித்திக்,ஈஸ்வரன், சபரி, கண்ணன், பேச்சாளர்கள் ஆலடி சங்கரையா, பால் துரை, கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், பூமா தேவி, ரபீக், கோவிந்தராஜ், டி.கே. பாண்டியன், லட்சுமணன்,தேவராஜன் மாடசாமி சுரண்டைபிரபாகரன், தேவேந்திரன், மகளிர் காங்கிரஸ் சேர்மக்கனி, கடையநல்லூர் எஸ். எம்.எ. சர்புதீன் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர், எம். சுந்தர பாண்டியன் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர், பி. சமுத்திரம், எஸ்.எம்.மஸ்தான் எஸ். ஆர். எஸ். ரமேஷ் காங்கிரஸ் துணைத் தலைவர், பி. மாடசாமி மாவட்ட பொதுச் செயலாளர்கள் முகமது ரபி, வி. முத்தையா, பி.எஸ். சித்திக், அபுதாஹிர் நகர பொதுச் செயலாளர், முபாரக், அப்துல் காதர், அபுபக்கர் நகரத் துணைத் தலைவர், குருநாதன், சித்திக், சேக் உஸ்மான், எஸ், ஆர், எஸ், சுரேஷ், சுரண்டை நகர்மன்ற தலைவர் ப. வள்ளி முருகன் அனைவருக்கும் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் தொண்டர்கள் நகரக் கழக நிர்வாகிகள், ஆண்களும், பெண்களும் திரளாக கலந்து கொண்டு பங்கேற்றனர்.



சென்னை, சூரப்பட்டு, மதுரா மேட்டூர் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ சுயம்பு நாகாத்தம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா பௌர்ணமி திதி, பூசம் நட்சத்திரம், சித்தயோகம், பூர்வபட்சம் கூடிய சுபயோக சுபதினத்தில் மீன லக்னத்தில், தைப்பூச நந்நாளில் வெகு சிறப்பாக நடந்தேறியது. கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து மகா தீபாராதனை, அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்குதல் மற்றும் சிறப்பு அன்னதானம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் கிருஷ்ணன், பாலச்சந்தர் மற்றும் கும்பாபிஷேக விழா குழுவினருடன் இணைந்து மதுரா மேட்டுக்குப்பம் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆவுடையார்கோவில் அருகே காடத்திவயல் கிராமத்தில் மாட்டுவண்டி எல்கை பந்தயம்



ஆவுடையார்கோவில், பிப்.7–

ஆவுடையார்கோவில் அருகே காடத்திவயல் கிராமத்தில் நேதாஜி பிறந்தநாள் மற்றும் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே காடத்திவயல் கிராமத்தில் நேதாஜி பிறந்தநாள் மற்றும் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. இதில் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை இராமநாதபுரம் சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட இரட்டை மாட்டுவண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன பெரியமாடு, சின்னமாடு, புதுப்பூட்டு என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் 80 மாட்டு வண்டிகள் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி ஒன்றையொன்று சீரிப் பாய்ந்து முந்திச் சென்றன.

போட்டியில் வெற்றிபெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.2லட்சம் ரொக்கப் பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டது, சாலையின் இருபுறமும் நின்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டுரசித்தனர்.

# அறந்தாங்கி சுற்றுவட்டாரத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை அமைச்சர்கள் குழு பார்வையிடாததை கண்டித்து ஆர்ப்பாட்டம்




அறந்தாங்கி,பிப்.7-
புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சுற்றுவட்டார பகுதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு பெய்த தொடர்மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள் அழுகியும் கடலை, உளுந்து உள்ளிட்ட பயிர்வகைகளுக்கு இழப்பீடுவழங்கக்கோரியும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் குழு பார்வையிடாததை கண்டித்தும் நாளை ஆர்ப்பாட்டம்-கல்லணைக் கால்வாய்விவசாயிகள்சங்க துணை தலைவர் பேட்டி
காலம்தவறி பெய்த மழையால் டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் தண்ணீரில்மூழ்கிவீணாகிப் போனது இதனை கணக்கெடுப்பதற்காக தமிழக முதல்வர் அமைச்சர்கள் குழு அமைத்து பார்வையிட்டு ஆய்வு செய்ய உத்தரவிட்டிருந்தார் தமிழகமுதல்வர் அமைத்த அமைச்சர்கள் குழு டெல்டா மாவட்டமான தஞ்சை,நாகை ஆகிய பகுதிகளை மட்டும் பார்வையிட்டு விட்டு திரும்பிசென்றுவிட்டனர். இதனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவம் தவறி பெய்த மழையால் பாதிக்கப்பட்டபயிர்களை அமைச்சர்கள் குழு ஆய்வு செய்யாமலே அறிக்கை தாக்கல் செய்துள்ளனர், இதனால் புதுக்கோட்டை மாவட்டத்தில்உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் விவசாய பயிர்கள் பாதிக்கப்பட்ட கடலை,உளுந்துபயிர்களை ஆய்வு செய்யாமல் அமைச்சர்கள் குழு தமிழக முதல்வருக்கு அறிக்கை அனுப்பி இருப்பதால் புதுக்கோட்டை மாவட்ட விவசாய சங்கத்தினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
மேலும் உடனடியாக தமிழக முதல்வர் புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரைலட்சம்ஹெக்டர் பாதிக்கப்பட்டுள்ள அறந்தாங்கி, ஆவுடையார் கோவில் மணமேல்குடி சுற்றுவட்டார பகுதிகளில் பயிரிடப்பட்டு மழையால் பாதிக்கப்பட்டுள்ள நெல் உளுந்து கடலை பயிர்களை ஆய்வு செய்து உரிய நிவாரணம் தர வேண்டுமென விவசாய சங்கத்தினர் அறந்தாங்கி கோட்டாட்சியர் சொர்ணராஜ் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.
மேலும்தமிழகமுதல்வர் டெல்டாமாவட்டங்களை பார்வையிட வந்த அமைச்சர்கள் குழு பரிந்துரைப்படி ஏக்கர் ஒன்றுக்கு20ஆயிரம்ரூபாய் நிவாரணம்வழங்கப்படும் என அறிவித்துள்ளது விவசாயிகளை மேலும் துன்பத்திற்கே ஆளாக்கி உள்ளது.. தமிழக முதல்வர் புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ய தனி குழு அமைப்பதோடு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி நாளை விவசாயிகள் ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக தமிழ்நாடு விவசாய சங்கம் கல்லணைக் கால்வாய் விவசாயிகள் சங்கதுணை தலைவர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## வேலூரில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி

# எம்.பி. கதிர் ஆனந்த் தலைமையில் திமுகவினர் மௌன ஊர்வலம்




வேலூர், பிப். 7 -
வேலூர் மாவட்டம், காட்பாடியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா 54 வது நினைவு தினத்தையொட்டி வேலூர் மாவட்டம் காட்பாடி தாராபடவேடு பகுதியிலுள்ள வேலூர் மாநகராட்சி1வதுமண்டல அலுவலகத்திலிருந்து வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுகவினர் மௌன ஊர்வலமாக வந்து காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்திலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் வளையம்வைத்து அஞ்சலி செலுத்தினர்.
இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட பொருளாளர் தயாநிதி, வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார்,1வதுமண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, பகுதி செயலாளர்கள் வன்னிய ராஜா,பரமசிவம்மாமன்ற உறுப்பினர்கள் அன்பு, சித்ராலோகநாதன்,சித்ரா மகேந்திரன், டீட்டா சரவணன், ரஜினி, திமுக நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சென்னை, மாங்காட்டில் இயங்கி வரும் ரிஷ்ஸ் இன்டர்நேஷனல் ஸ்கூல் 7வது ஆண்டு விழா



சென்னை ,பிப்.7-
தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்அன்பில்மகேஷ் பொய்யாமொழியின் மனைவி ஜனனி அன்பில் மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ஆண்டு விழா பேருரை நிகழ்த்தி, பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ-மாணவியருக்கு தங்கப் பதக்கங்களையும் விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்.
BHARATH ED ALL அகாடமி நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் எஸ்.ஜே.பரத் மற்றும் AMATS பயோ டெக் ட்ரைனிங் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் ஆறுமுகம் பெருமாள் ஆகியோர்சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.
பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் ரிஷ்ஸ் குரூப் ஆஃப் இன்ஸ்டிட்யூஷன் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் என். சக்திவேலு மற்றும் இயக்குனர் பாலாம்பிகா சக்திவேலு ஆகியோர் வரவேற்றனர். விழாவின் நிறைவில், பள்ளி மாணவ-மாணவியர்கள் கலந்து கொண்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

▶ சென்னை, போரூரில் உத்திர இராமேஸ்ரம் எனும் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை இராமநாதீஸ்வரர் திருக்கோவில் மிக அருகாமையில் கிருஷ்ணா நகர் என்னும் பெயர் பெற்று விளங்கும் பகுதியில் முழு முதற்கடவுள் அருள்மிகு வினை தீர்க்கும் மாணிக்க விநாயகர் மற்றும் பரிவார மூர்த்தி, ஸ்ரீ தட்சிணா மூர்த்திக்கும் நிகழும் மங்களகரமான சுபகிருது வருஷம் பௌர்ணமி திதி, பூச நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதனத்தில் காலை மீன லக்னத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து மகா தீபாராதனை, அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்குதல் மற்றும் சிறப்பு அன்னதானம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய திருப்பணி குழுவின் தலைவர் எஸ். தாமோதரன், செயலாளர் ஏ.எம்.சேகர் துணை பொருளாளர் பி.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், கிருஷ்ணா நகர் பகுதி வாழ் மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



▶ காரைக்காலில் பருவம் தவறி பெய்த கனமழையின் காரணமாக வயல்களில் முற்றிலும் சாய்ந்துவிட்ட நெற்பயிர்களை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா காரைக்கால் மாவட்ட விவசாயத்துறை கூடுதல் இயக்குனர் செந்தில்குமார் மற்றும் துறை அதிகாரிகளுடன் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பார்வையிட்டார். சம்பா மற்றும் தாளடி பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பயிர்ச்சேத விவரங்களை உடனடியாக விவசாய துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும், உரிய நிவாரணம் கிடைக்க உதவுவதாகவும், விவசாயிகளிடம் உறுதியளித்தார். இந்நிகழ்வில் ஏராளமான விவசாய பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.




▶ மயிலாடுதுறை மாவட்டத்தில் பெய்த கன மழையின் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெற் பயிர்கள்மூழ்கியதை மயிலாடுதுறை மாவட்டம் , குத்தாலம் வட்டம், சென்னியநல்லூர், பகுதிகளில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் அமைச்சர் எம். ஆர். கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி .சமயமூர்த்தி, வேளாண்மை இயக்குனர் ஆ. அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ. பி.மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் .முருகன்,மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள்,மற்றும் பலர் உடன் இருந்தனர்



▶ மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சி பால் பண்ணை அருகில் ரூ.114.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகளை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ் மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் யுரேகா உதவி செயற்பொறியாளர் ராமர், ஒப்பந்ததாரர் அபிராமி கன்ஸ்டரக்சன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.



▶ இராயபுரம் சட்டமன்றத்திற்கு உட்பட்ட 53வது வட்டத்திலுள்ள, போஜராஜன் நகர் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வரும் இடத்தில், கழிவுநீர் தேங்கி கொசுகள் பரவும் அபாயம் உள்ளதாக வந்த புகாரை அடுத்து. இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு. குடிநீர் வழங்கல் - கழிவுநீரகற்று வாரியம், சுகாதரத் துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளை அழைத்து அதனை விரைவாக சீர்செய்திடும் படி உத்தரவிட்டார். உடன் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் வேளாங்கண்ணி, சுகாதாரத் துறை, மாநகராட்சி அதிகாரிகள், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்



▶ சென்னை, தாம்பரம், இரும்புலியூர், வேம்புலி அம்மன் கோவில் தெருவில் எழுந்தருளி, அருள்புரிந்து வரும், சாந்த சொரூபினி அருள்மிகு ஸ்ரீ வேம்புலி அம்மன் ஆலயத்தில், சுப ஸ்ரீ ஸ்ரீ நிகழும் சுபக்கிருது வருடம், உத்திராண்யம் பௌர்ணமி திதி, பூசம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் மீனம் லக்னத்தில் அருள்மிகு ஸ்ரீ வேம்புலி அம்மன் மற்றும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகர், நவக்கிரகங்கள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோபுர கலச கும்பாபிஷேகம், மூலவர் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, மூலவருக்கு மகா அபிஷேகம், மகா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து மதியம் எஸ்.பி.கேட்டரிங் சர்வீஸ் குழுவினரின் அன்னதானமும் நடைபெற்றது. மாலை சந்தன காப்பு அலங்காரமும் அதனைத் தொடர்ந்து, ஸ்ரீ வேம்புலி அம்மன் உற்சவர் திருவீதி உலாவும் நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கும்பாபிஷேக விழா குழுவினருடன் இணைந்து ஆலய நிர்வாகத்தினர் மற்றும் இரும்புலியூர் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# காரைக்காலில் அதானி குழுமத்தின் முறைகேட்டை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



காரைக்கால், பிப். 7 -
கணக்கு மோசடி, பங்குச்சந்தை முறைகேடு மற்றும் அளவுக்கு அதிகமான கடன் போன்றவற்றின் மூலம் தனது சொத்து மதிப்பினை உயர்த்தி காட்டி உலக பணக்காரர் வரிசையில் இடம் பிடித்து, மிகப்பெரிய ஊழலை செய்திருப்பதாக அமெரிக்காவை சேர்ந்த ஹின்டென்ஸ் பர்க் என்ற உலக பங்குத்தந்தை ஆராய்ச்சி நிறுவனம் 102 பக்க அறிக்கையாகவும், அதில் 88 கேள்விகளையும் எழுப்பி உள்ளது.
இதற்கு, அதானி குழுமம் சரியான பதில் அளிக்காமல் இந்த அறிக்கை இந்திய தேசத்தின் மீதான தாக்குதல் என்று திசை திருப்புகின்ற வேலையை செய்துள்ளதாக கூறி காரைக்கால் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுச்சேரி முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, மாநில செயலாளர் மோகனவேல், மாவட்ட செயலாளர் கருணாநிதி, சிவகணேஷ், வடக்கு வட்டார தலைவர் சுப்பையன், இளைஞர் காங்கிரஸ் மாநில செயலாளர் சமீர், இளைஞர் காங்கிரஸ் காரைக்கால் மாவட்ட தலைவர் ரஞ்சித், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராகவும் அதானி குழுமத்திற்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஜாயிண்ட் பார்லிமென்ட் கமிட்டி அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின் பிரதான கோரிக்கை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.




▶ தமிழ்நாடு முழுவதும் உள்ள முருகன் கோயில்களில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் முருகன் கோவில்கள் விழாக்கோலம் கொண்டது. அலகு குத்துதல், காவடி எடுத்தல் உள்ளிட்ட நேர்த்திக் கடன்களை பக்தர்கள் செலுத்தினர். இதனால் முருகன் கோவில்களில் கூட்டம் அலைமோதியது. குன்றின் மீது அமைந்துள்ள குன்றத்தூர் முருகனை தரிசனம் செய்ய அதிகாலை முதலே ஏராளமான பொதுமக்கள் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு, நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். விண்ணை முட்டும் அளவுக்கு பக்தர்கள் கந்தவேல் முருகனுக்கு அரோகரா... ஆரோகரா...என கோஷங்களை முழங்கினர். ஆங்காங்கே பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, பம்மல் அன்னதான குழுவினர் குன்றத்தூர் முருகன் கோவிலுக்கு அருகில் 10, 000க்கும் அதிகமானோருக்கு அன்னதானம் வழங்கினர். வேண்டுதலை நிவர்த்தி செய்ய வரும் பக்தர்கள், காவடி மற்றும் அலகுகுத்தி வரும் பக்தர்கள் தரிசனம் செய்ய இடையூறு ஏற்படாத வண்ணம் குன்றத்தூர் போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தைப்பூச திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் குன்றத்தூர் முருகன் கோவில் செயல் அலுவலர் ஸ்ரீ கன்னியா சிறப்பாக செய்திருந்தார்.

## புதுச்சேரி மாநிலத்தில் முதன்முறையாக துவங்கப்பட்ட

# கைவினைப் பொருட்களின் விற்பனையகம் காரைக்காலில் திறக்கப்பட்டது



காரைக்கால்,பிப்.7
புதுச்சேரி அரசு கூட்டுறவுத்துறை மூலம் புதுச்சேரி மாநிலத்தில் முதன்முறையாக கைவினைப் பொருட்களின் விற்பனையகம் நேற்று காரைக்காலில் துவங்கப்பட்டது. இதனை காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.
இதன் மூலம் புதுச்சேரி கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தவும், பல்வேறு மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட கைவினைப் பொருட்களை மக்கள் வாங்கி பயன்பெறும் வகையிலும்துவங்கப்பட்ட கைவினைப்பொருட்கள் விற்பனையகத்தில் கலம்காரி, தஞ்சாவூர் கலைத்தட்டுகள், பிரம்பாலான கூடை, தட்டு வகைகள், பதப் படுத்தப்பட்ட மலர்களான மலர் கொத்துக்கள், தோல் பொருட்கள், காகித கூழ் கொலுபொம்மைகள், பல்வேறு வகையான சிற்பங்கள், தஞ்சாவூர் பாரம்பரிய பொம்மைகள், மரப்பாச்சி பொம்மைகள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறி துணிகள் இங்கு விற்பனை செய்யப்படுகிறது.
காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன் மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முகமதுமன்சூர் ஆகியோர் பொருட்களை வாங்கி விற்பனையை துவக்கி வைத்தனர். கடை திறந்த அன்றே ஏராளமானோர் ஆர்வமுடன் வந்து தங்களுக்கு தேவையான கைவினைப் பொருட்களை வாங்கி சென்றனர். எல்லா பொருட்களும் இயந்திர மயமான நிலையில் கைவினைப் பொருட்களுக்கான மவுசு இன்னும் குறையவில்லை என்பதற்கு கைவினைப் பொருட்கள் விற்பனையகத்திற்கு வந்த கூட்டமே சாட்சி.

# கருங்குழி ஸ்ரீ ராகவேந்திரா பிருந்தாவனத்தில் சத்யநாராயண பூஜை 9 ஆண்டுகளாக பூட்டிய அறையில் தவம் செய்யும் சித்தர் தரிசனம்



செங்கல்பட்டு, பிப். 7 -
செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த கருங்குழி ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் தை மாதம் பௌர்ணமியை முன்னிட்டு யோகபிரவேசம் செய்து பூட்டிய அறையில் 9 ஆண்டுகளுக்கு மேலாக தவத்தில் அமர்ந்திருக்கும் கருங்குழி பிருந்தாவன் சித்தர் யோகிரகோத்தமா பக்தர்களை சந்திக்கும் 105 - வது பௌர்ணமி தரிசனம் நடைபெற்றது.
இந்நிகழ்வில் பக்தர்கள் அனைவருக்கும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சித்தர் நல்லாசி வழங்கினார். அதனை தொடர்ந்து மக்கள் சுபிஷமுடன் வாழ ஞானலிங்கத்திற்கு பூஜை செய்யப்பட்டு ஸ்ரீ ராகவேந்திராஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் யாகம் வளர்த்து சத்தியநாரயண பூஜையும் செய்து மகாதீப ஆராதனையை சித்தர் பக்தர்களுக்கு காண்பித்தார்.
இந்நிகழ்ச்சியில் மாநில செயலாளர் தேவராஜன், அண்ணாமலை, தேவகி, மதுரை கார்த்திகைகுமார், ராஜ், ஹரிஹரன் யமுனா உள்ளிட்ட தொழிலதிபர்களும் முக்கிய பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.
இவ்விழாவில் கருங்குழி மட்டுமின்றி செங்கல்பட்டு, சென்னை, புதுச்சேரி, பெங்களூர், கடலூர், மற்றும் விழுப்புரம், உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சித்தரிடம் ஆசிபெற்று சென்றனர்.
இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை யோகி ரகோத்தமா ஸ்வாமிகள் அறக்கட்டளை முதன்மை அறங்காவலர் ஏழுமலைதாசன் தலைமையில் செய்திருந்தனர். அறக்கட்டளைநிர்வாகிகள் எல்.செல்வம்,டி.கண்ணன், கே.ஆர்.சுரேஷ், வி.கமலக்கண்ணண், வழக்கறிஞர் சுரேஷ், ஆர். துளசிங்கம், பி.பரந்தாமன் ஆகியோரின் முன்னிலையில் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# அதிமுகவின் 2,646 பொதுக்குழு உறுப்பினர்களில் 2,501 பேர் தென்னரசுக்கு ஆதரவு சி.வி.சண்முகம் தகவல்

சென்னை , பிப். 7 -

அதிமுகவில் உளள 2,646 பொதுக் குழு உறுப்பினர்களில் 2,501 பேர், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வேட்பாளர் தென்னரசுவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் தெரிவித்தார்.



உச்ச நீதிமன்ற உத்தரவின் படி அதிமுக பொதுக்குழு உறுப்பினர்கள் தந்த வேட்பாளர் ஒப்புதல் படிவங்களை அதிமுக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் மற்றும் சி.வி.சண்முகம் ஆகியோர் நேற்று தேர்தல் ஆணையத்தில் சமர்பித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய இவர்கள்," உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் படிவங்களை தேர்தல் ஆணையத்தில் சமர்பித்துள்ளோம்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சுற்றறிக்கை மூலம் பொதுக் குழு கூட்டப்பட்டது. பொதுக் குழுவில் மொத்தம் 2,665 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 15 பேர் இறந்துவிட்டனர். 2 பேரின் பொறுப்பு காலாவதி ஆகிவிட்டது. 2 பேர் மாற்றுக் கட்சிக்கு சென்றுவிட்டனர். மீதம் உள்ள 2,646 பேர் வாக்களிக்க தகுதி பெற்றனர். இவர்கள் அனைவருக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தச் சுற்றறிக்கையில் தென்னரசுவை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்றும், வேறு ஒருவரின் பெயரை தெரிவிக்க விருப்பினால் தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. 2501 பேர் தென்னரசுவை வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்று வாக்களித்து உள்ளனர்.

தென்னரசுக்கு எதிராக ஒரு வாக்கு கூட வரவில்லை. ஆனால், 145 உறுப்பினர்கள் வாக்குகளை பதிவு செய்யவில்லை. உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி தேர்தல் ஆணையத்தில் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பின்படி ஆவண செய்வதாக தெரிவித்துள்ளது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் படிவங்களை பெற்ற 128 பேரில் ஒருவர் கூட தென்னரசுவிற்கு ஆதரவாக படிவங்களை வழங்கிவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் இருந்து எங்கள் தரப்பு வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுகிறார். இரட்டை இலை வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் தரப்பு வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுகிறார்.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் இரட்டை இலை வெற்றி பெற பிரச்சாரம் செய்வோம். தென்னரசுவுக்கு அல்ல. இபிஎஸ் அறிவித்த வேட்பாளருக்கு பிரச்சாரம் இல்லை. இரட்டை இலைக்கு வாக்களிக்க பிரச்சாரம் செய்வோம்"என்று அவர் கூறினார்.

# திருவரங்குளம் வட்டார பகுதிகளில் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதம் நிவாரணம் வழங்க வேளாண்மை துறை அதிகாரிகள் உறுதி

திருவரங்குளம், பிப்.7-

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டார பகுதிகளான கத்தகுறிச்சி, பாலையூர், குலவாய்ப்பட்டி, மணியம்பலம், களங்குடி, வல்லத்ராகோட்டை, வாண்டாகோட்டை, பூவரசகுடி, கொத்தக்கோட்டை, தட்சிணாபுரம், திருவரங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்த தொடர் மழையின் காரணமாக சுமார் 900 ஹெக்டர் அளவில் சாகுபடி செய்து அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்தது.



விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட சேத மதிப்பை கணக்கிடும்படி திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேல் மற்றும் வேளாண் அலுவலர்கள் விவசாய நிலங்களுக்கு சென்று கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டு நெல் சாகுபடி பயிர்களை ஆய்வு செய்தனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் விரைந்து பெற்று தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தென்காசி புதிய மாவட்ட ஆட்சியருடன் தென்காசி எம்எல்ஏ பழனி நாடார் சந்திப்பு

தென்காசி,பிப்.7-

தென்காசி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக நேற்று துரை. ரவிச்சந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார், புதிதாக பொறுப்பு ஏற்றுக்கொண்டமாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரனை தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவருமான எஸ். பழனி நாடார் நேற்று மாலை 4 மணி அளவில் மரியாதை நிமித்தமாக சந்தித்து சுரண்டையில் வரும் பத்தாம் தேதி காமராஜர் வணிக வளாகஅரங்கில் வைத்து நடைபெறும் புத்தகத் திரு விழாவில் கலந்து கொள்ள அதற்குரிய அழைப்பிதழையும் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏஜிஎம். கணேசன், காஜா மைதீன், மாவட்ட செயலாளர் பிரபாகர், பொருளாளர் ஈஸ்வரன், வட்டாரத் தலைவர் பெருமாள், இளைஞர் காங்கிரஸ் சந்தோஷ், சித்திக், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

# திருமயம் கோட்டை காலபைரவர் கோயில் உண்டியல் கொள்ளை

திருமயம் , பிப். 7 -

திருமயம் கோட்டை காலபைரவர் கோயில் உண்டியல் மர்ம நபர்களால் உடைக்கப்பட்டு கொள்ளை போயுள்ளது.

சைவ வைணவ தளங்களில் மிக முக்கியமான திருமயம் கோட்டை முன்பாக கோட்டையை காவல் காக்கும் கோட்டை காலபைரவர் கோயில் உள்ளது. அந்த வழியாக செல்லும் பக்தர்கள் அனைவரும் கோயில் முன்பாகஇறங்கிவழிபாடு நடத்திட்டு உண்டியலில் காணிக்கை செலுத்தி விட்டு செல்வது வழக்கம். தேய்பிறை, அஷ்டமி நாட்களில் இந்த கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் பூசணிக்காய் வைத்து விளக்கேற்றி வழிபடுவார்கள். இந்த நிலையில் நேற்றுமுன் தினம் நள்ளிரவு அந்த கோயில் முன்பாக இருந்த பெரிய சில்வர் உண்டியலைமர்மநபர்கள் உடைத்து பணத்தை அள்ளிச்சென்றுள்ளனர்.



இது பக்தர்களுக்கு பேரதிர்ச்சியை உண்டாக்கி உள்ளது. எப்பொழுதும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள அந்த பகுதியில் உண்டியலை உடைத்து கொள்ளையடித்துசென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக துரை ரவிச்சந்திரன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார், மாவட்ட ஆட்சியருக்கு அரசு அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# அன்னவாசல் அருகே மோட்டார் சைக்கிள்கள் மோதல்

## இருவர் படுகாயம்

அன்னவாசல் , பிப். 7 -

அன்னவாசல் அருகே உள்ள சிறுஞ்சுனையை சேர்ந்தவர் ராஜேந்திரன் (32) இவர் மோட்டார் சைக்கிளில் பெருமநாடு பெட்ரேல் பங்கு அருகே வந்துள்ளார். அப்போது சேந்தாமங்கலத்தை சேர்ந்த பாண்டி (30) என்பவர் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார் அப்போது இரண்டு மோட்டார் சைக்கிளும் மோதியதாக கூறப்படுகிறது.

இதில் ராஜேந்திரன் மற்றும் பாண்டி ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர் பின்னர் அருகில் இருந்தவர்கள் இருவரையும் மீட்டு சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசுமருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து அன்னவாசல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலுப்பூர் அருகே சூதாட்டம் விளையாடிய 6பேர் கைது

இலுப்பூர் , பிப். 7 -

இலுப்பூர் அருகே பொது இடத்தில் சூதாட்டம் விளையாடி கொண்டிருந்த 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

இலுப்பூர் அருகே உள்ள சாங்கிராப் பட்டிபகுதிகளில் பொது இடத்தில் சூதாட்டம் விளையாடுவதாக இலுப்பூர் போலீசாருக்குதகவல் கிடைத்ததுஇதனையடுத்து இன்ஸ்பெக்டர்ஹேமலதா உள்ளிட்ட போலீசார் சாங்கிராப்பட்டி வீரச்சிக்குளம்பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டார்.

அப்போது அப்பகுதியில் சூதாட்டம் விளையாடி கொண்டிருந்த சாங்கிராபட்டி பகுதியை சேர்ந்த வீரையா (52) நாகராஜ் (30) பால்ராஜ் (31) அஜீத்குமார் (32) வேலுச்சாமி (38) பாண்டி (36) ஆகிய 6 பேர் மீது வழக்குபதிவுசெய்து கைது செய்த போலீசார் அவர்கள்சூதாட்டத்திற்கு பயன்படுத்திய சூதாட்ட அட்டைகள் ரொக்க பணம் 650-ஐ பறிமுதல் செய்தனர். பின்னர் அனைவரும் ஜாமினில் விடுவிக்கப்பட்டனர்.



புதுக்கோட்டை நகரில் உள்ள உழவர் சந்தையில் விவசாயிகள் 104 கடைகள் வைத்து வியாபாரம் செய்து வரும் நிலையில், உழவர் சந்தைக்கு வெளியே நகராட்சி சார்பில் புதிய கடை கட்டப்பட்டு அது தனி நபர்களுக்கு கொடுக்கப்பட உள்ளதாகவும், அதனால் தங்களின் வியாபாரம் பாதிக்கப்படும் என குற்றம்சாட்டி 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் உழவர் சந்தையில் நேற்று வியாபாரம் செய்யாமல் நுழைவாயில் முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சியில் பொதுமக்கள் தங்கள் அடையாள அட்டையை பதிவு செய்திட சிறப்பு முகாம்

தென்காசி,பிப்.7-

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கோவிந்த பேரி ஊராட்சி மன்றத் தலைவர் டி.கே. பாண்டியன் தலைமையில் கோவிந்தபேரி ஊராட்சியில் மத்திய அரசின் பாரத பிரதமரின் மருத்துவ காப்பீடு திட்டம் ரூபாய் 5 லட்சமும் ஆயுஷ்மான், பாரத் யோஜனா-வில் பொதுமக்கள் 59- வயதுக்குட் பட்டவர்களுக்கு அடையாள அட்டை பதிவு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நல வாரியத்தின் மூலம் ஈசாரம் திட்டத்தின் கீழ் 2-லட்சம் விபத்து காப்பீட்டு திட்டத்தில் பொதுமக்கள் அடையாள அட்டை பதிவு மற்றும் சீரோபேலன்ஸ் வங்கி கணக்கு துவக்கம் ஆகிய திட்டங்களில் பொதுமக்கள் தங்கள் அடையாள அட்டை பதிவு செய்திட சிறப்பு முகாமானது ஊராட்சி மன்றத் தலைவர் டி. கே. பாண்டியனால் துவக்கி வைக்கப்பட்டது.



மேலும் இதில் சூர்யா பொது சேவை மையம் தென்காசியை சேர்ந்த ஊழியர்கள் சுஷ்மா, ராகவி, மற்றும் நாகராஜ் ஆகியோர் பதிவு செய்தனர். ஊராட்சி செயலர் மூக்காண்டி மாரித்துரை, சுப்பையா பாண்டியன், முன்னாள் தலைவர் துரைப்பாண்டியன், வார்டு உறுப்பினர் பொன்னுத்தாய், மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்று சென்றனர்.

# அன்னவாசலில் ஓய்வு பெற்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

அன்னவாசல் , பிப். 7 -

அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி ஓய்வு பெற்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்பாட்டத்திற்கு ஓய்வூதியர் சங்க ஒன்றிய தலைவர் லோகநாதன் தலைமை தாங்கினார். கூட்டமைப்பு நிர்வாகி வடிவேலு முன்னிலை வகித்தார். இதில் மாவட்ட கன்வீரர் கூட்டமைப்பு சுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் சரோஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் சத்துணவு அங்கன்வாடி திட்டங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு வருவாய் கிராம உதவியாளர்களுக்கு இணையாக அகவிலைப்படியுடன் மாதாந்திர சிறப்பு ஊதியமாக ரூ.750 வழங்க வேண்டும், சத்துணவு அங்கன்வாடி திட்டங்களில் பணிபுரிபவர்களுக்கு முறையான காலமுறை ஊதியம் வழங்குவதற்கு ஏதுவாக அனைத்து அரசு துறைகளிலும் உள்ள நிரந்தர காலமுறை ஊதியத்திலான காலி பணியிடங்களில் 50 சதவீத பணியிடங்களை ஒதுக்கி அதில் தகுதியுள்ள சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களை பணிமூப்பு அடிப்படையில் பணிஉயர்வு வழங்கி ஈர்த்திட வேண்டும், காலை சிற்றுண்டி திட்டத்தை தனியாரிடம் ஒப்படைப்பதை கைவிட்டு சத்தணவு திட்டத்தில் இணைத்திட வேண்டும், உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி கோசங்கள் எழுப்பப்பட்டது. இதில் ஓய்வு பெற்ற அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## அதானிக்கு துணை போகும் ஒன்றிய அரசை கண்டித்து

# வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, பிப். 7 -

வட சென்னை கிழக்கு மாவட்ட தலைவரும், சென்னை மாநகராட்சி காங்கிரஸ் கட்சி தலைவருமான எம்.எஸ்.திரவியம் தலைமையில் சென்னை தண்டையார்பேட்டை எல்.ஐ.சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





இதில் 100 க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சினர் கலந்து கொண்டு கையில் பாதாதைகள் ஏந்தியபடி ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

எல்.ஐ.சி மற்றும் எஸ்.பி.ஐ. பொதுத்துறை நிறுவனங்களில் ஏழைகள் கடின உழைப்பால் சேமித்த பணத்தை எல்ஐசி, பொதுத்துறை வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் அதானி குழுமத்தில் முதலீடு செய்ததின் மூலம், அந்த நிறுவனங்கள் சந்தை மதிப்பை இழந்தது. இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும், பொது சொத்துகளை கொள்ளையடிக்கும் அதானியின் கூட்டுச் சதியை கண்டித்தனர்

கூட்டு நாடாளுமன்றக் குழுவின் கீழ் பாரபட்சமற்ற விசாரணையை நடத்த வேண்டும். எல்.ஐ.சி., எஸ்.பி.ஐ. மற்றும் பிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை முதலீடு செய்ப நிர்ப்பந்தித்தது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் மற்றும் முதலீட்டாளர்களை பாதுகாக்க சரியான தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கறம்பக்குடி அருகே தொடர்மழையால் இடிந்து விழுந்த வீடு - பரிதவிப்பில் கூலித்தொழிலாளி

கறம்பக்குடி,பிப்.07-

கறம்பக்குடி அருகே அரங்குளம் மஞ்சுவயலில் மழையால்ஈரம்காத்திருந்த கூலி தொழிலாளியின் ஓட்டு வீடு முழுமையாக சேதம் அடைந்ததால் வசிப்பதற்கு இடமின்றி குடும்பத்தினருடன் தவிப்பு, உடனடியாக தங்கள் நிலையை கருத்தில் கொண்டு மழையால் சேதமடைந்த வீட்டை மீண்டும் கட்டுவதற்கு உரிய இழப்பீட்டு தொகைவழங்க மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூலித் தொழிலாளியின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனா.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே அரங்குளம் மஞ்சுவயல் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவக்குமார், அவரது மனைவி சீதா. இவர்கள் இருவரும் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு திருமேனிநாதன் என்ற மகன் உள்ளார். இந்நிலையில் இவர்கள் வசித்து வரும் ஓட்டு வீடு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 7 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த மூன்று தினங்களாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கன மழை பெய்தது.



இதனால் சிவக்குமார் வசித்துவந்தவீடு ஈரப்பதம் காத்திருந்த நிலையில் நேற்று மதியம் திடீரென சுவர்களில் உள்ள ஈரப்பதத்தில் விரிசல் ஏற்பட்டு மேற்கூரை ஓடுகல் ஒவ்வொன்றாக சரியத்தொடங்கியுள்ளது. இதைபார்த்துசுதாரித்துக் கொண்ட சிவக்குமார் அவரது மனைவி சீதா மற்றும் மகன் திருமேனிநாதனுடன் அலறி அடித்து வீட்டை விட்டு வெளியேறி உள்ளனர். பின்னர் அந்த வீட்டின் மேற்கூரை ஓடுகல் முற்றிலுமாக சரிந்து வீட்டின் உள்ளே விழுந்த நிலையில் பக்கவாட்டு சுவர்களும் முழுமையாக இடிந்து சேதம் அடைந்தது. மேலும் சிவக்குமார் சுதாரித்துக் கொண்டு வீட்டில் மேற்கூரை ஓடுகல் மற்றும் பக்கவாட்டு சுவர்கள் முழுமையாக இடிந்து விழுவதற்கு முன்னாள் வீட்டை விட்டு அவரது குடும்பத்தினருடன் வெளியேறியதால் அதிர்ஷ்டவசமாக அவர்கள் உயிர் தப்பினர்.

மேலும் இருந்த ஒரு வீடும் முழுமையாக இடிந்து விழுந்துள்ளதால் தற்போதுசிவகுமார்மற்றும் அவரது குடும்பத்தினர் வசிப்பதற்கு இடமின்றி தவித்து வருவதாகவும் அதுமட்டுமின்றி கூலி வேலை செய்து அந்த வீட்டைகட்டியநிலையில் மீண்டும் அதே போன்று வீடு கட்டுவது கடினம் என்றும் அதனால் உடனடியாக தங்கள் நிலையை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அரசும் மழையால் இடிந்த வீட்டை மீண்டும் கட்டுவதற்கு உரிய இழப்பீடு வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிவக்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் கண்ணீர்மல்ககோரிக்கை விடுத்துள்ளனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# துருக்கி - சிரியா நாடுகளில் ஆழ்ந்த பூகம்பம் 1500 பேர் பலி

# ஆவுடையார்கோவில்: 10ம் நூற்றாண்டு புத்த சமயச்சின்னம் கண்டுபிடிப்பு





# பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிவாரணத்தை அறிவித்தார் முதல்வர்


சென்னை / புதுக்கோட்டை | 07.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

07.02.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**சர் பி. எஸ். சிவசுவாமி** , இந்திய வழக்கறிஞர், நிருவாகி, அரசியல்வாதி (பி.1864) (இ.1946)



**தேவநேயப் பாவாணர்** , தமிழறிஞர் (பி.1902) (இ.1981)



**கே. என். சொக்சி** , இலங்கை அரசியல்வாதி (பி.1913) (இ.2015)



**ஆ. மாதவன்** , கேரளத் தமிழ் எழுத்தாளர் (பி.1934) (இ.2021)



**டோனி டேன் கெங் யம்** , சிங்கப்பூரின் 7வது குடியரசுத் தலைவர் (பி.1940)



**இராசமனோகரி புலேந்திரன்** , இலங்கை அரசியல்வாதி (பி.1949) (இ.2014)



## இன்றைய நினைவு நாள்

**சுவாமி அகண்டானந்தர்** , சுவாமி இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர் (பி.1864) (இ.1937)

